1153/2021

1285

காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
முன்னிலை – ப.அ.ஆறுமுகம், எம்.எஸ்.சி., எம்.எட், எம்.ஃபில்.,
ப. மு. எண். 1214 / அ1 / 2021, நாள். 20.04.2021.

பொருள் :
தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு தொகுதி IV தேர்வு 2018-2019 மற்றும் 2019-2020-ன்படி நியமனம் செய்யப்பட்டு திருபெரும்புதூர் கல்வி மாவட்டம், திருபெரும்புதூர் மாவட்டக் கல்வி அலுவலகம் - இளநிலை உதவியாளர் திரு. அ.பார்த்தசாரதி என்பாருக்கு இளநிலைஉதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் சார்ந்து.

மாவட்டக் கல்வி அலுவலகம் வரப்பெற்றது 22 APR 2021 திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்

பார்வை :
1. அரசாணை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு), நாள் 18.05.2018
2. சென்னை-03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுச் செயலாளரின் கடிதம் எண்.2563/PSD-I2/2020 நாள்.21.07.2020.
3. காஞ்சிபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண். 2682/அ1/2020, நாள். 17.09.2020.
4. திருபெரும்புதூர், மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.1153/அ1/2021 நாள்.01.04.2021.

-------

திருபெரும்புதூர் கல்வி மாவட்டம், திருபெரும்புதூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு. அ.பார்த்தசாரதி என்பாருக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தொகுதி IV தேர்வு 2018-2019 மற்றும் 2019-2020 மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை-3 காணும் செயல்முறைகளின்படி திருபெரும்புதூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு 21.09.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்காண் பணியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்டதாலும், கல்விச் சான்றுகளின் உண்மைத் தன்மை அறியப்பட்டுள்ளதாலும், பார்வை 4-ல் காணும் மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதத்தின்படி மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சார்ந்த பணியாளருக்கு தற்போது அரசாணை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு), நாள் 18.05.2018-ன்படி முதன்மைக் கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும், கீழ்க்காணும்' பணியாளருக்கு மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்கவேண்டும் எனத் தெரிவித்தும்; தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 31(4)ல் தெரிவித்துள்ளவாறு ஐந்தாண்டுகளுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் அவரது பெயருக்கு எதிரே கலம் (5)-ல் உள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

| வ.எண். | தேர்வாணைய பட்டியல் வரிசை எண். | பெயர் / பதவி / பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | 85 | திரு. அ.பார்த்தசாரதி,<br>இளநிலை உதவியாளர்<br>மாவட்டக் கல்வி அலுவலகம்,<br>திருபெரும்புதூர். | 21.09.2020<br>முற்பகல் | 21.09.2020<br>முற்பகல் |

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இணைப்பு – பணிப்பதிவேடு (தொகுதி – 1)

20/4/21
முதன்மைக் கல்வி அலுவலர்,
காஞ்சிபுரம்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் வழியாக)
நகல்
மாவட்டக் கல்வி அலுவலர், திருபெரும்புதூர்.

19/04/2021

ஆணை
நகல் சார்ந்த பணியாளருக்கு சார்பு செய்யப்படுகிறது.
பெறுநர்: சார்ந்த பணியாளர்.

22/04/2021

பெற்றுக்கொண்டேன்

22/4/21